## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். 68 /2020**

2023 ஆம் ஆண்டு மே மாதம் 03 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சண்முகம் | தொழில் | :விவசாயம் |
| தந்தை பெயர் | : வெங்கடாசலம் | சமயம் | : |
| கிராமம் | :மேல்மலையனூர் | சாதி | : |
| வட்டம் | : மேல்மலையனூர் | வயது | : 34 |

தேதி 03.05.2023
சாட்சியையும் எதிரியும் வளத்தி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. சுரேந்தர் Gr.1 - 2474 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.
**( 1,2 , 3 எதிரிகள் ஆஜர், 4 ம் எதிரி ஆஜர் இல்லை, கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் மேல்மலையனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி,மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் என்னுடைய நிலத்தில் இருந்து காலை 7 மணி அளிவில் சென்று கொண்டியிருந்தேன். அப்போது வளத்தி காவல் நிலையத்தார் என்னிடம் வந்து சென்றதிற்கு கையொப்பம் கேட்டார். எந்த வழக்கிற்காக கையொப்பம் செய்தேன் என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி எதிரியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

**3.** போலிசார் விசாரணையில் கடந்த 30.09.2018 ம் தேதி காலை சுமார் 7.30 மணி அளவில் எங்கள் ஊரில் சேர்ந்த ஜெயபால் என்பவர் பொம்பி என்பவரின் முள் தோப்பில் வழியாக வந்துகொண்டியிருந்தோம் என்றும் அப்போது வளத்தி காவல் நிலையத்தார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிடுவதாகவும் எங்கள் முன்னிலையில் வரைபடம் வரைந்து சாட்சிகளாக கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**4.** கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் சம்பவ இடத்தை போலிசாரிடம் நான் காட்டவில்லை என்றாலும் சரிதான். எந்த வழக்கிற்காக நான் கையொப்பம் செய்தேன் என்றால் தெரியவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.